**செய்தி வெளியீடு எண்:369** **நாள் : 20.07.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சென்னை சைதாப்பேட்டை உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, உதவி ஆணையாளர் அலுவலகத்தில் மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் இன்று (20.07.2016) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

புதிய குடும்ப அட்டை கோரியும், முகவரி மாற்றம், பெயர் நீக்கல், பெயர் சேர்த்தல் ஆகியவற்றுக்கு மனு செய்தவர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உரியவர்கள் அனைவருக்கும் விசாரணைக்குப்பின் குடும்ப அட்டைகள் தாமதமின்றி வழங்கவேண்டுமென அலுவலர்களை அறிவுறுத்தினார். **விண்ணப்பதாரர் கூட்டுக்குடும்பத்தில் தனி சமையலறையுடன் கூடிய வீட்டில் வசித்தால், தேவையான ஆவணங்களின் அடிப்படையில் உரிய விசாரணைக்குப்பின் புதிய குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைங்கிணங்க, சென்னை மாநகர பகுதிக்குட்பட்ட 17 மண்டல அலுவலகங்களில் கடந்த ஐந்து ஆண்டுகளில், இதுவரை 1 இலட்சத்து 56 ஆயிரத்து 667 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பாக, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமைகளில் நடைபெறும் நுகர்வோர் குறைதீர் முகாம்களில் சென்னை வடக்கு (ம) தெற்கு மண்டங்களில் மட்டும், கடந்த இரண்டு மாதங்களில், முகவரி மாற்றம், பெயர் நீக்கல், பெயர் சேர்த்தல் ஆகியவற்றுக்கென பெறப்பட்ட 3,165 மனுக்களில், 2,648 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள 517 மனுக்கள் மீது

விரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு அமைச்சர், அலுவலர்களை அறிவுறுத்தினார். மாநிலம் முழுவதும் கடந்த 5 ஆண்டுகளில், நடைபெற்ற குறைதீர் முகாம்களில், இதுவரை 5 இலட்சத்து 9 ஆயிரத்து 184 மனுக்கள் பெறப்பட்டு, 5 இலட்சத்து 8 ஆயிரத்து 412 மனுக்கள் மீது அன்றைய தினமே தீர்வு காணப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, கடந்த 5 ஆண்டுகளில் சென்னை மாநகரில் மட்டும், 128 முழு நேர நியாய விலை அங்காடிகளும், 2 பகுதி நேர அங்காடிகளும் திறக்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்.

பொது மக்கள் தங்களுடைய குறைகளை தெரிவிக்க, சென்னை உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் அலுவலகத்தில் செயல்படும், 044–28592828 என்ற தொலைபேசி எண், consumer@nic.in என்ற மின்னஞ்சல், மற்றும் www.consumer.tn.gov.in என்ற இணையதள முகவரியிலும் தொடர்பு கொண்டு தீர்வு காணலாம்.

இந்த ஆய்வின் போது, உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு.பிரதீப் யாதவ்,இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைசெயலாளர்/ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், திரு. கா.பாலசந்திரன்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

Principal Secretary
Co-op.,Food and CP.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**